ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,126 புரட்டாசி மாதம்

# அருட்போர் ஆயத்த நிலைக் குருவாணை!



"நம்மை எந்தத் தலைவர் ஆள்கிறார் அல்லது எந்தக் கட்சி ஆள்கிறது என்பது முக்கியமில்லை; நம்மை நமது தாய்மொழியான தமிழ்மொழியில் உள்ள ஆதிசிவனார் அருளிய இந்துவேதம்தான் ஆள வேண்டும்."

இந்துமதத்தின் தலைமை ஆச்சாறிய குருபீடம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்.

இந்து இலக்கியக் கழக வெளியீடு

43,73,126ஆம் ஆண்டின் புரட்டாசி மாத வெளியீடு

**தலைப்பு:- <u>அருட்போர் ஆயத்த நிலைக் குருவாணை</u>**

# <u>உள்ளுறை</u>

1. **“அழைக்கிறார்! அறிவிக்கிறார்! அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்”** - இந்துவேத முன்னேற்றக் கழகத்தின் செயல்நிலைகளை விளக்கி குருதேவர் விடுக்கும் அழைப்பு அறிவிப்புக்களை வழங்கி வெளியிட்ட அறிக்கை எண் 786.
2. **“செயல்வீரர்களுக்கு தன்னிலை விளக்கம்”** - இந்துவேத முன்னேற்றக் கழகத்தின் செயல்வீரர்களுக்கு குருதேவர் வழங்கிய செயல்திட்டங்கள் உள்ள அறிக்கை எண் 787.
3. **“சைவ சமய வரலாறு”** - மதுரையைச் சேர்ந்த தமிழர் சமயப் பாதுகாப்பு கழகத்தின் தலைவருக்கு குருதேவர் விடுத்த சுருக்க விளக்க அஞ்சல்.
4. **“அருட்போர் ஆயத்த நிலைக் குருவாணை”** - அடியான்களுக்கு அருளாணை பெற்ற குருவாணையாக குருதேவர் விடுத்த விளக்க அஞ்சல்.
5. **“செய்தித் தாளின் விளம்பரக் கட்டுரை”** - சங்கராச்சாரியாரின் நூற்றாண்டு விழாவைப் பாராட்டி வெளியிடும் ‘இந்துவேதம்’ என்ற சிறு நூலுக்கு தரப்பட்ட அறிமுகக் கட்டுரை.

# அறிக்கை எண்: 786

# அழைக்கிறார்! அறிவிக்கிறார்!
# அந்தணர் அண்ணல்
# ஞானாச்சாரியார்!

## இ.மு.க. (I.M.K.)
## இந்துவேத முன்னேற்றக் கழகம்

**பதினெண்சித்தர் மடம் - அறக்கட்டளை**
**பதிவு: 796 / 4, 1991**

***ஆதிசிவனார் அமுதத் தமிழில் அருளியுள்ள***
***இந்துவேதம் கற்றிட வாரீர்!***
***முத்தமிழின் இந்துவேதம் ஓதி***
***பாதிப்பு அகற்றி பாதுகாப்பு பெற வாரீர்!***

***தமிழ் எழுத்தையும் சொல்லையும் பயன்படுத்தி***
***அருளை மருந்தாகவும், விருந்தாகவும்***
***விளைவித்திட வாரீர்! வாரீர்!! வாரீர்!!!***

தொடர்பு:- ஞானாச்சாரியார், இந்து வேதாகம பாடசாலை, பதினெண்சித்தர் மடம், காரனோடை, சென்னை-67.

# அழைக்கிறார்! அழைக்கிறார்!!
# அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார்!

1. இந்துக்கள் எல்லோரும் பூசை செய்யக் கற்றுக்கொள்ள அழைக்கிறார்.
2. அருளூறு தமிழ் எழுத்துக்களையும், சொற்களையும் பயன்படுத்தி பூசை செய்யக் கற்றுக்கொள்ள அழைக்கிறார்.
3. அருளூறு தமிழ் மொழி எழுத்துக்களையும், சொற்களையும் பயன்படுத்தி மந்திரித்து அருள் வழங்கிட கற்றுக்கொள்ள அழைக்கிறார்.
4. ஒவ்வொரு வீடு தோறும் மாலையில் விளக்குப் பூசை செய்து எல்லா நலமும் பெற்றுக் கொள்ள பயிற்சி பெற அழைக்கிறார்.
5. கிராமங்களில் உள்ள எல்லாக் கோயில்களையும் அருளூற்றுக்களாக மாற்றிட உழைக்க அழைக்கிறார்.
6. எல்லா நலங்களையும் விளைவித்துத் தரும் கூட்டு வழிபாட்டு திருவிளக்குப் பூசையை மாதம்தோறும் செய்யக் கற்றுக்கொள்ள அழைக்கிறார்.
7. திருமாங்கலிய யோகமும், வளமும், வலிமையும் பெற்றிட கூட்டு வழிபாட்டு கலச பூசையை வாரம்தோறும் செய்யக் கற்றுக்கொள்ள அழைக்கிறார்.
8. உடல் நலம் காத்திடும் ஓகாசனம், யோகாசனம், மோகாசனம், போகாசனம் கற்றுக்கொள்ள அழைக்கிறார்.
9. எல்லா வகையான சத்தி, சித்தி, முத்திகளுக்குரிய குண்டலினி, குண்டளினி, குண்டழினி கற்றுக்கொள்ள அழைக்கிறார்.
10. இந்து வேதாகம நெறி முறை விதிப் படி குடும்ப ஆண்டவர், குலதெய்வம், கிராமத்து தேவர் தேவதை, நாட்டுக் கடவுளர் ஆகிய நான்கு வகைப்பட்டவர்களையும் நிறைவாகப் பூசை செய்யக் கற்றுக்கொள்ள அழைக்கிறார்.
11. இந்து வேதாகம நெறி முறை விதிப்படி தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும்

நான்கு வகைப்பட்ட வாழ்க்கைகளிலும் நீதி, நேர்மை, உரிமை, பெருமைகளேக் கற்றுக்கொள்ள அழைக்கிருர்.

12. இந்து வேதாகம நெறி, முறை, விதிகளேத் தெரிந்து புரிந்து இந்துவேதம் வளர்த்திட! இந்துமதம் காத்திட!! அழைக்கிருர்! அழைக்கிருர்!!

# அறிவிக்கிருர்! அறிவிக்கிருர்!! அந்தணர் அண்ணல் ஞானுச்சாரியார்!

1. முத்தமிழ் என்ருலேயே இந்துவேதம், இந்துமதம், கடவுள், கோயில் என்றுதான் பொருள். இதை நம்பி ஒப்புக் கொள்ளாதவர்கள் எப்படி நமக்குத் தலேவர்களாக, வழிகாட்டிகளாக இருக்க முடியும்?
2. இந்து மதத்தை மறுப்பவர்கள் கடவுளேயும், தமிழையும், வேதத்தையும் மறுக்கிருர்கள் என்றுதான் பொருள். எனவே, இவர்கள் எப்படி நமக்குத் தலேவர்களாக, வழிகாட்டிகளாக இருக்க முடியும்?
3. கடவுளே மறுப்பவர்கள் இந்துவேதத்தையும், இந்துமதத்தையும், கோயிலேயும் காக்கும் தமிழ்மொழியை மறுக்கிருர்கள், வெறுக்கிருர்கள், எதிர்க்கிருர்கள் என்றுதான் பொருள். இவர்கள் எப்படி நமக்குத் தலேவர்களாக, வழிகாட்டிகளாக இருக்க முடியும்?
4. நாம் நமது தாய்மொழியில், நமது தாய்நாட்டில் உள்ள கடவுளர்களே பூசை செய்து பயனடைவதைத் தடுப்பவர்கள், கேலி செய்பவர்கள், எதிர்ப்பவர்கள் எப்படி நமக்குத் தலேவர்களாக, வழிகாட்டிகளாக இருக்க முடியும்?
5. நமது தாய்மொழியான தமிழில் உள்ள இந்துவேதத்தை, இந்துவேதக் கடவுள்களே, இந்துவேதக் கோயில்களே கேலியும் கிண்டலும் செய்து எதிர்த்து அழிப்பவர்கள் எப்படி நமக்குத் தலேவர்களாக, வழிகாட்டிகளாக இருக்க முடியும்?
6. தமிழ்நாட்டில் தமிழ்மொழியில்தான் அனேத்து வகையான பூசைகளும், சாத்தர, சாத்திர, சாத்திற சம்பிறதாயச் சடங்குகளும், திருநாட்களும்,

திருவிழாக்களும், ... நிகழ்த்தப் பட வேண்டுமென்று நேரடியாகக் கூற முடியாதவர்களாக இருப்பவர்கள் எப்படி நமக்குத் தலைவர்களாக, வழிகாட்டிகளாக இருக்க முடியும்?

7. தமிழ்மொழி விழிச்சி, எழிச்சி, செழிச்சி, மலர்ச்சி, உயர்ச்சி, வளர்ச்சி, ஆட்சி பெறுவதற்கு ஏற்ப தமிழ்மொழியில் உள்ள இந்து வேதத்தையும், கோயிலையும் பயன்படுத்த முன் வராதவர்கள் எப்படி நமக்கு தலைவர்களாக, வழிகாட்டிகளாக இருக்க முடியும்?
8. தமிழ்மொழியில் உள்ள இலக்கியங்கள் அனைத்தும் அருளாளர்களாலேயே எழுதப்பட்டு அருளுலகைப் பற்றிய செய்திகளையே வழங்குவதை விரும்பாத, நம்பாத, ஏற்காத நாத்திகர்கள் எப்படி நமக்குத் தலைவர்களாக, வழிகாட்டிகளாக இருக்க முடியும்?

# பாடுபடுகிறது! பாடுபடுகிறது!! இந்துவேத முன்னேற்றக் கழகம்! (இ.மு.க.) (I.M.K.)

1. இந்துக்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டி ஒற்றுமைப்படுத்தி இந்துவேத வழியில் அருளாட்சி அமைத்திடப் பாடுபடுகிறது இ.மு.க.
2. தமிழையும், தமிழ்க் கடவுள்களையும், கோயில்களையும் பாதுகாத்திட பதினெண்சித்தர் மடத்தில் இந்து வேதாகம பாடசாலையை நிறுவப் பாடுபடுகிறது இ.மு.க.
3. ஆதிசிவனுர், அண்டபேரண்டங்களிலிருந்து (அ) அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியும், அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியுமான முத்தமிழ் மொழியையும், (ஆ) இந்துவேதத்தையும், (இ) மெய்ஞ்ஞானக் கொடியையும் இம்மண்ணுலகத்தவர்களைப் பாதுகாத்திட அருளினுர் என்ற பேருண்மையைச் செயலாக்கிடப் பாடுபடுகிறது இ.மு.க.
4. முத்தமிழ் மொழியில் உள்ள இந்துவேத மந்தர, மந்திர, மந்திறங்களைக் கற்று ஓதி அருளைப் பெற்று எல்லா வகையான வறுமைகளையும்,

வெறுமைகளையும், தொல்லைகளையும், கவலைகளையும் அகற்றிக் கொள்ள எல்லோரையும் தயாராக்கிடப் பாடுபடுகிறது இ.மு.க.

5. அவரவர் அவரவர் விருப்பத்திற்கேற்ப மடாதிபதியாக, பீடாதிபதியாக, சன்னிதானமாக, ஆதீனமாக, தம்பிரானாக, ஆச்சாரியாராக, பூசாறியாக, குருக்கலாக, குருமாராக, குருதேவராக, ஓதுவாராக, தேசிகராக, பண்டாரமாக, ஐயராக, அருட்சினையாளராக (அர்ச்சகர்), சாத்திரியாராக, தோத்திரியாராக, அந்தணராக உருவாகிடுவதற்குப் பாடுபடுகிறது இ.மு.க.

6. ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் நிம்மதி, நிறைவு, அமைதி, அன்பு, மகிழ்ச்சி, சமாதானம், பொறுப்போடும் பொறுமையோடும் பிறரோடு கூடி வாழல், ... முதலிய நல்லுணர்வுகள் விளைந்திடப் பாடுபடுகிறது இ.மு.க.

7. குடும்ப வாழ்விலும், சமுதாய வாழ்விலும், அரசியல் வாழ்விலும் மக்களிடையே பற்று, பாசம், ஒற்றுமை, உண்மை அன்பு, நட்பு, பொறுப்பு, பொறுமை முதலிய உணர்வுகள் வற்றாது ஊற்றெடுத்திடும்படி செய்வதற்குப் பாடுபடுகிறது இ.மு.க.

இவற்றின் மூலம்,

அமைப்போம்! அமைப்போம்!
அருளாட்சி அமைப்போம்!

அகற்றுவோம்! அகற்றுவோம்!!
அருளுலகப் பொருளுலக அறியாமைகளையும், புரியாமைகளையும் அகற்றுவோம்!

ஆக்குவோம்! ஆக்குவோம்!!
எல்லோரையும் அருளாளர் ஆக்குவோம்!

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: தட்டச்சுப் பொறி நகலாக இருந்தது.//**

# அறிக்கை எண்: 787

# இ.மு.க. இந்துவேத முன்னேற்றக் கழகம் பயிற்சி முகாம்

# செயல்வீரர்களுக்கு தன்னிலை விளக்கம்

1. முதல் திட்டம்: நம்மவர்கள் ஒவ்வொருவரும் அந்தந்த வட்டாரத்தில் செயல்படுவதற்கென்று எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று அந்தந்த வட்டாரத்தில் மிகத் தெளிவாகக் கணக்கெடுத்து ஆக வேண்டும். இவர்களில் அநுபவம் உள்ளவர்களில், தனித்துச் செயல்படும் ஆற்றல் உள்ளவர்கள் தலைமையில்; ஒருவர் இருவர் புதியவர்கள் சேர்ந்து கொண்டு; தனித்தனிக் குழுக்களாக செயல்படத் தயாராக வேண்டும்.
2. இந்தக் குழுக்கள் அவர்களுடைய நகரம் அல்லது வட்டம் (தாலுகா) அல்லது ஒன்றியம் (யூனியன்) என்று எடுத்துக் கொண்டு;
   a) நகரமாக இருந்தால் அந்த நகரத்தை மிகப் பெரிய பகுதிகளாக கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்று பகுத்துக் கொள்ள வேண்டும் அல்லது (வார்டு) பகுதிகளாகப் பிரித்துக் கொள்ள வேண்டும்.
   b) இதேபோல், வட்டம், ஒன்றியம் (யூனியன்) என்ற அமைப்புக்களில் எத்தனை பஞ்சாயத்துக்கள் அல்லது கிராமங்கள் இருக்கின்றன என்று பிரித்துக் கொள்ள வேண்டும்.

c) இப்படி தெரு அல்லது கிராமம் என்ற பகுப்புக்களை பகுத்துக் கொண்ட பிறகு;

நம்மிடம் உள்ள குழுக்களின் தலைவர்கள் தாங்கள் தங்களுக்கென்று வசதி, வாய்ப்பு, ஏற்கனவே உள்ள அறிமுகம் முதலியவற்றிற்கு ஏற்ப நகரத்தின் பகுதிகளையோ, தெருக்களையோ, பஞ்சாயத்துக்களையோ, கிராமங்களையோ தாங்கள் செயல்படுவதற்கென்று தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

3. இப்படி எவரெவர் தலைமையில் என்னென்ன இடங்களில் ஒரு மாத காலத்துக்குள் செயல்படப் போகிறார்கள் என்ற தெளிவான விவரத்தை மண்டல அலுவலகத்துக்கும், தலைமைப்பீடத்திற்கும் (இந்து வேதாகம குருகுலம், அம்பத்தூர், சென்னை) சுமார் ஒரு வார காலத்திற்குள் தெரிவித்தாக வேண்டும்.

4. இந்தத் தனிக்குழுக்கள் வீடு வீடாகச் சென்று கதவைத் தட்டி இ.மு.க. பற்றி கூறி இ.மு.க.வில் உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும்.

   a) ஒவ்வொரு வீட்டிலும் உள்ள ஒவ்வொருவருக்கும் நன்மை விளைய வேண்டும்.

   b) ஒவ்வொருவருக்கும் எத்தகைய பாதிப்புக்கள், எந்த அளவில் இருந்தாலும் அவற்றை விலக்கியே ஆக வேண்டும், நீக்கியே ஆக வேண்டும், சரி செய்தே ஆக வேண்டும்.

   c) இதற்காகவே வீடு தோறும் அன்றாடம் மாலையில் விளக்குப் பூசை, வாராவாரம் ஊரில் உள்ள கோயில்களில் “கூட்டு வழிபாட்டு கலச பூசை”, மாதாமாதம் ஒரு பொது இடத்தில் அல்லது கோயிலில் “கூட்டு வழிபாட்டு திருவிளக்குப் பூசை” கொண்டாடப்பட்டேயாக வேண்டும்.

   d) நம்முடைய ஊரில் உள்ள கோயில்களில் அருள் ஊற்றெடுக்க வேண்டும். இதற்கு கிணற்றைத் தூர் எடுப்பது போல், நம்முடைய ஊர்க் கோயில்களிலேயே பூசைகள் செய்து

"குழந்தையும் தெய்வமும் கொண்டாடினால்தான் செழிப்பாக நலமுடன் செயல்படுவர்" என்ற இந்து வேதாகமக் கருத்துப்படி செயல்பட்டே ஆக வேண்டும்.

e) நமது தாய்மொழியான தமிழ்மொழியில் உள்ள இந்துவேத பூசை மொழிகளான காயந்திரி மந்தர, மந்திர, மந்திறங்களை ஒவ்வொரு வீட்டிலும் உள்ள ஒவ்வொருவரும் வசதி வாய்ப்பு ஓய்வுக்கேற்ப காலையிலோ, மதியத்திலோ, மாலையிலோ, இரவிலோ ஓத வேண்டும்.

f) இதேபோல் ஒரு குடும்பத்திற்கு ஒருவர் என்று ஓர் ஆணோ அல்லது பெண்ணோ கட்டாயமாக செவ்வாய், வெள்ளி, ஞாயிறு என்ற மூன்று நாட்களில் கோயில்களுக்குச் சென்று வீட்டில் ஓதிய காயந்திரி மந்தர, மந்திர, மந்திறங்களையும் மற்ற இந்துவேத பூசைமொழிகளையும் ஓதிடல் வேண்டும்.

g) இப்படி, பூசைமொழி வாசகங்களையும், மற்ற காயந்திரிகளையும் ஒவ்வொரு வீட்டிலும், ஊரிலுள்ள ஒவ்வொரு கோயிலிலும் வாரத்தில் மூன்று நாட்களாவது ஓதப்பட்டேயாக வேண்டும். மற்ற நாட்களில் ஓய்வும், வசதி வாய்ப்பும் உள்ள ஊரார்கள் அன்றாடம் கோயில்களில் கூடி காயந்திரி மந்தர மந்திர மந்திறங்களையும், மற்ற இந்துவேதப் பூசைமொழிகளையும் ஓதியே ஆக வேண்டும். அப்பொழுதுதான் ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு ஊரும் அருட்பொலிவைப் பெறும், வலிவைப் பெறும், வளத்தைப் பெறும்.

5. நமது தாய்மொழிதான் கடவுள் மொழி, தேவ மொழி, தெய்வ மொழி, ஆண்டவர் மொழி, வேத மொழி, அருள் மொழி, அண்டபேரண்டங்களில் இருந்து வந்த மொழி, செம்மையான மொழி, முத்தமிழ் மொழி என்ற உரிமைகளுக்கும், பெருமைகளுக்கும்

உரியது. எனவே, நாம் நமது தாய்மொழியைப் பற்றிய வரலாற்றை முறையாகவும், நிறைவாகவும் தெரிந்து கொள்ள வேண்டும், புரிந்து கொள்ள வேண்டும். நமது தாய்மொழியில் உள்ள இலக்கியங்கள் அனைத்தையும் பற்றிய செய்திகளையும், வரலாறுகளையும் தெரிந்து கொள்ள வேண்டும், புரிந்து கொள்ள வேண்டும்.

6. நான்கு யுகங்களுக்கு முன்பிருந்தே இருந்து வரும் நமது தமிழ்மொழிதான்: இந்த உலகில் தோன்றிய முதல் மொழி, மூத்த மொழி, உலக மொழிகளுக்கு எல்லாம் தாய்மொழி; அருளுலக கடவுள்கள், கிராமத்து தேவர் தேவதைகள், குலதெய்வங்கள், ஆண்டவர்கள் முதலியோர்களின் தாய்மொழி என்ற பெருமையும், உரிமையும் உடையது. இதனால், நம்மவர்கள் தமிழ்மொழியை நன்றாக எழுதப் பேசக் கற்றுக்கொள்ள வேண்டும். எழுதப் பேசத் தெரியாதவர்களும், படிப்பறிவு இல்லாதவர்களும், படிப்பதற்கு ஓய்வு, வாய்ப்பு, வசதி, சந்தர்ப்பம் இல்லாதவர்களும், தமிழ்மொழியின் இலக்கியச் செய்திகளையும், இலக்கிய இன்பங்களையும், இலக்கியப் பயன்களையும் தெரிந்து கொள்வதற்கு ஏதுவாக நகரத்தின் நான்கு பிரிவுகளிலும், அல்லது ஒவ்வொரு பஞ்சாயத்திலும் அல்லது ஒவ்வொரு கிராமத்திலும் முத்தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவிக்க வேண்டும். இதன்மூலம் பணச் செலவு இல்லாமல் பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், படித்து விட்டு வேலை இல்லாதவர்கள், வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள், ஆங்காங்கே வேலை பார்க்கக் கூடிய ஆசிரியர்களில் தமிழ் ஆர்வம் உள்ளவர்கள், தமிழாசிரியர்களில் தமிழ்த் தொண்டு செய்ய விரும்புகிறவர்கள் முதலியவர்களைக் கொண்டு, வாராவாரம் ஒரு தமிழ்ச் சொற்பொழிவு அல்லது கதை கூறுதல் அல்லது ஏதேனும் ஒரு நூலைத் தொடர்ந்து படித்து விரிவுரை கூறுதல், ... என்ற செயல்திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

இந்த முத்தமிழ்ச் சங்கத்தின் செயல்திட்டங்களை உறுப்பினர்களின் சந்தாத் தொகையுடன் (சந்தனத் தொகை = சந்ததத் தொகை; சந்ததம் = நிலையானது; சந்தனக் கட்டை அரைக்க அரைக்க சந்தனம் தருவது போல் உறுப்பினர்கள் செயல்பட செயல்பட குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை தருவது); ஊரில் வாரம் ஒருமுறை உண்டியல் குலுக்கி வசூல் செய்வது, ஊரில் உள்ள செல்வர்களிடம் நன்கொடை பெறுதல் முதலியவற்றின் மூலம் வசூலாகும் தொகையுடன் சேர்த்து நிகழ்த்த வேண்டும்.

7. அதாவது, இ.மு.க.வினர் ஊர் ஊராக, கிராமம் கிராமமாக, தெருத் தெருவாக, வீடு வீடாகச் சென்று, கதவைத் தட்டி, ஒவ்வொரு வீட்டிலும் இருக்கக் கூடியவர்களிடம்;
   (a) நம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள,
   (b) நம் குடும்பத்துக்குள் பற்று, பாசம் வளர்த்துக் கொள்ள,
   (c) நம்மவர்கள் அன்புடனும், கனிவுடனும், பண்புடனும் பழகக் கற்றுக் கொள்ள, வாழக் கற்றுக் கொள்ள,
   (d) நம்மவர்கள் பொறுப்பாகவும், பொறுமையாகவும் பழகிக் கொள்ள,
   (e) நம்மவர்கள் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ள,
   (f) நம்மவர்கள் நம்முடைய ஊர்ப் பொது வேலைகளை சமமாகப் பகிர்ந்து எல்லோரும் செய்திட,
   (g) நம்மவர்கள் நமக்குக் கிடைக்கக் கூடிய உணவுப் பொருள்களையும், மற்ற வசதிகளையும் போட்டி பொறாமை, சண்டை சச்சரவு இல்லாமல் சமமாகப் பகிர்ந்து துய்த்திட,
   (h) நம்மவர்கள் ஊரோடு கூடி வாழ,
   (i) நம்மவர்கள் ஊருக்குத் தேவையானவற்றை ஊர்ப் பொதுவில் ஒன்று கூடிப் பேசி, பேச்சு வார்த்தையின் மூலம் திட்டமிட்டு செயல்பட்டிட,

(j) ஊர்ப் பொதுவில் ஊருக்குள்ளும், ஊர் மொத்தத்திலும் பிரிவினைகளை உண்டாக்கிக் கொள்ளாமல் எல்லோரும் சமத்துவத்தோடும், சமாதானத்தோடும், அமைதியோடும், நிம்மதியோடும், நிறைவோடும் பொறுமையாக, பொறுப்பாக செயல்பட்டிட;

வழிகாட்டுவதற்கு, நமது தாய்மொழியான தமிழ்மொழியில் உள்ள இந்துவேதத்தால்தான் முடியும். எனவே, நம்மை எந்தத் தலைவர் ஆள்கிறார் அல்லது எந்தக் கட்சி ஆள்கிறது என்பது முக்கியமில்லை; நம்மை நமது தாய்மொழியான தமிழ்மொழியில் உள்ள ஆதிசிவனார் அருளிய இந்துவேதம்தான் ஆள வேண்டும். அதாவது, தமிழ்மொழியில் உள்ள இந்து வேதம்தான் நமது விழியாக இருக்க வேண்டும்; தமிழ்மொழியில் உள்ள இந்துவேதம்தான் நமது வழியாக இருக்க வேண்டும்; தமிழ்மொழியில் உள்ள இந்துவேதம்தான் நமக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும்; தமிழ்மொழியில் உள்ள இந்துவேதம்தான் நமது வழித்துணையாக இருக்க வேண்டும்; தமிழ்மொழியில் உள்ள இந்துவேதம்தான் நமது வழிப்பயனாக இருக்க வேண்டும்.

நமது கொள்கைகளும், குறிக்கோள்களும், செயல்திட்டங்களும், வாழ்வியல் நடைமுறைகளும், பழக்க வழக்கங்களும், சடங்குகளும், சாத்தர சாத்திர சாத்திற சம்பிறதாயங்களும் முழுக்க முழுக்க தமிழ் மொழியில் உள்ள இந்து வேதத்தின் அடிப்படையில்தான் இருக்க வேண்டும், இருக்க வேண்டும், இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் நலமாக, வளமாக, வலிவாக, பொலிவாக மகிழ்வோடும், நிறைவோடும், நிம்மதியோடும் சமாதான வாழ்வு வாழ முடியும், வாழ முடியும், வாழ முடியும் என்று கூறிச் செயல்படுவதுதான் இ.மு.க. எனும் இந்துவேத முன்னேற்றக் கழகம்.

8. இப்படி இ.மு.க.வைப் பற்றி கிராமத்தில் உள்ள ஒவ்வொருவரிடமும்
   a) உங்களுடைய வாழ்க்கையில் ஒரே ஒரு முறை உங்களுடைய தாய் நாட்டிற்காக ரூபாய் இரண்டு (ரூபாய் 2/-) கட்டணமாகச் செலுத்தி இ.மு.க.வில் உறுப்பினராகுங்கள்;
   b) உங்களுடைய வாழ்க்கையில் ஒரே ஒரு முறை உங்களுடைய தாய்மொழிக்காக ரூபாய் 2/- கட்டணமாகச் செலுத்தி இ.மு.க.வில் உறுப்பினராகுங்கள்;
   c) உங்களுடைய வாழ்க்கையில் ஒரே ஒரு முறை உங்களுடைய இனத்துக்காக ரூபாய் 2/- கட்டணமாகச் செலுத்தி இ.மு.க.வில் உறுப்பினராகுங்கள்;
   d) உங்களுடைய வாழ்க்கையில் ஒரே ஒரு முறை உங்களுடைய இந்து வேதத்துக்காக ரூபாய் 2/- கட்டணமாகச் செலுத்தி இ.மு.க.வில் உறுப்பினர் ஆகுங்கள்;
   e) உங்களுடைய வாழ்க்கையில் ஒரே ஒரு முறை உங்களுடைய இந்து மதத்துக்காக ரூபாய் 2/- கட்டணமாகச் செலுத்தி இ.மு.க.வில் உறுப்பினர் ஆகுங்கள்;
   f) உங்களுடைய வாழ்க்கையில் ஒரே ஒரு முறை உங்களுடைய குடும்ப ஆண்டவர்களை நீங்கள் தெரிந்து புரிந்து பூசை செய்து பயனடைவதற்காக ரூபாய் 2/- கட்டணமாகச் செலுத்தி உறுப்பினராகுங்கள்;
   g) உங்களுடைய வாழ்க்கையில் ஒரே ஒரு முறை உங்களுடைய குல தெய்வங்களைத் தெரிந்து புரிந்து பூசை செய்து பயனடைவதற்காக ரூபாய் 2/- கட்டணமாகச் செலுத்தி இ.மு.க.வில் உறுப்பினராகுங்கள்;
   h) உங்களுடைய வாழ்க்கையில் ஒரே ஒரு முறை உங்களுடைய கிராமத்து தேவர் தேவதைகளைத் தெரிந்து, புரிந்து பூசை செய்து பயனடைவதற்காக ரூபாய் 2/- கட்டணமாகச் செலுத்தி இ.மு.க.வில் உறுப்பினராகுங்கள்;

i) உங்களுடைய வாழ்க்கையில் ஒரே ஒரு முறை உங்களுடைய நாட்டுக் கடவுளர்களைத் தெரிந்து புரிந்து பூசை செய்து பயனடைவதற்காக ரூபாய் 2/- கட்டணமாகச் செலுத்தி இ.மு.க.வில் உறுப்பினர் ஆகுங்கள்;

j) உங்களுடைய வாழ்க்கையில் ஒரே ஒரு முறை உங்களுடைய குடும்பம் ஒற்றுமையோடும், பற்றுப் பாசத்தோடும், அன்போடும், இனிமையாக உருவாகிட ரூபாய் 2/- கட்டணமாகச் செலுத்தி இ.மு.க.வில் உறுப்பினர் ஆகுங்கள்;

k) உங்களுடைய வாழ்க்கையில் ஒரே ஒரு முறை உங்களுடைய ஊரார் அனைவரையும் ஒற்றுமையுடனும், சகோதரத்துவத்துடனும், சமத்துவத்துடனும், சமாதானத்துடனும் ஒன்று கூடி வாழ்ந்திடச் செய்வதற்காக ரூபாய் 2/- கட்டணமாகச் செலுத்தி இ.மு.க.வில் உறுப்பினர் ஆகுங்கள்;

l) உங்களுடைய வாழ்க்கையில் ஒரே ஒரு முறை உங்களுடைய வருங்காலச் சந்ததியார்கள் விழிச்சியோடும், எழிச்சியோடும், செழிச்சியோடும், மலர்ச்சியோடும், வளவளர்ச்சியோடும், மாட்சிமிகு ஆட்சிநிலை பெற்றிட ரூபாய் 2/- செலுத்தி இ.மு.க.வில் உறுப்பினர் ஆகுங்கள்;

.... .... .... என்று எளிமையாக எடுத்துக் கூறி செயல்பட வேண்டியதுதான் நமது செயல்திட்டம், செயல்திட்டம், செயல்திட்டம். எனவே, இனியும் நம்மவர்கள் கிராமத்து மக்களிடம் என்னென்ன கூற வேண்டும்? எப்படி யெப்படி கூற வேண்டும்? என்ற வினாக்களைத் தலைமைப் பீடத்தில் எழுப்பிக் கொண்டிருக்கக் கூடாது.

9. **<u>திருவிளக்குப் பூசையும், கலச பூசையும்</u>**:-

நம்முடைய முன்னோர்கள் கோயிலைக் கட்டித்தான் ஊரை உருவாக்கினார்கள். ஏனெனில், கோயில்கள்தான் அருட்கேணிகள்.

அந்த அருட்கேணிகளில் கிடைக்கும் நீர்தான் அருள். எனவே, கோயில்களுக்குச் சென்று அருள் பெற்றுக் கொண்டு வருவதன் மூலம்தான் நம் குடும்பத்தில் உள்ள பிறச்சினைகள், தொல்லைகள், துன்பங்கள், துயரங்கள் முதலியவைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும். அப்படி, கோயில்களுக்குச் சென்று அருள் பெறுவதற்குரிய வழிவகைகள்தான் கலச பூசை, திருவிளக்குப் பூசை முதலிய பூசைகள்.

இறைக்க இறைக்கத்தான் கேணியில் நீர் ஊறும். அதுபோல், கோயில்களில் கலச பூசை, திருவிளக்குப் பூசை, ... முதலிய பூசைகளைத் தொடர்ந்து செய்து வருவதன் மூலம்தான் நமக்கும் அருள் கிடைக்கும். அந்தந்தக் கோயில்களிலும் அருள் ஊற்றெடுக்கும். அதன் மூலம் நம் குடும்பம் மட்டுமல்லாது கிராமமும், நாடும் வளம் பெறும், வலிவு பெறும், பொலிவு பெறும். எனவே, இத்தகைய சிறப்பு வாய்ந்த கலசபூசையை, திருவிளக்குப் பூசையை நாமும் நம் குடும்பத்தவர்களும் செய்வது மட்டுமல்லாமல் ஊர் மக்கள் அனைவரையும் செய்யச் சொல்ல வேண்டும், தொடர்ந்து செய்து வரவும் வேண்டும்.

இதற்குரிய வழிவகைகள், இந்து வேதாகம நெறி முறைகள், ஆதிசிவனுரால் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் வழங்கப்பட்ட இந்து வேதத்தில் தெளிவாகத் திட்டவட்டமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றை காலங்கள் தோறும் தோன்றும் பதினெண்சித்தர் பீடாதிபதிகளான ஞானுச்சாரியார்கள் மக்களுக்கு வழங்கி வருகின்றனர். இன்றைய காலக் கட்டத்தில் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார் அவர்கள் இந்த வழிவகைகளை நமக்கு வழங்கியுள்ளார். இதை அறிந்து, புரிந்து, தெரிந்து, செயல்பட வேண்டும் நமது இ.மு.க. செயல்வீரர்கள்.

**<u>கலச பூசை</u>:-** வாரம் ஒருமுறை குறிப்பிட்ட நாட்களில் செய்யப்பட வேண்டும். இக் கலச பூசையின் மூலம் அந்தந்த கிராமத்தில் உள்ள தேவர் தேவதைகளை மட்டும்தான் வழிபட்டு அருள் பெற முடியும்.

**<u>திருவிளக்குப் பூசை</u>:-** மாதம் ஒருமுறை குறிப்பிட்ட நாட்களில் செய்யப்பட வேண்டும். இத் திருவிளக்குப் பூசையின் மூலம் எல்லாக் குடும்ப ஆண்டவர்களையும், குல தெய்வங்களையும், நாட்டுக் கடவுளர்களையும் வழிபட்டு அருள் பெற முடியும்.

**<u>வேண்டுகோள்</u>:-** இந்துவாகப் பிறந்தவர்கள் அனைவரும் கலச பூசையையும், திருவிளக்குப் பூசையையும் கட்டாயம் செய்தல் வேண்டும். தாங்கள் செய்வது மட்டுமின்றி மற்றவர்களையும் செய்யச் சொல்ல வேண்டும். அதற்காக ரூபாய் இரண்டு செலுத்தி இந்துவேத முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராக வேண்டும்.

ஓம் தென்னாடுடைய சீவனே போற்றி!
ஓம் எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!
ஓம் அற அர நமப் பார்வதி பாதமே போற்றி!
ஓம் அற அர மகாதேவப் பாதமே போற்றி!

அமைப்போம்! அமைப்போம்! அருளாட்சி அமைப்போம்!!
காப்போம்! காப்போம்! அருளாட்சி காப்போம்!!

வெற்றி நமதே! நாளை நமதே!

*[கட்டுரையின் தொடர்ச்சி அடுத்த பக்கத்தில்]*

# நமது செயல்வீரர்களுக்கு ஓர் எச்சரிக்கை அறிவிப்பு வேண்டுகோள்

1. "நமது மதமும், நமது மதத்திற்குரிய இந்து வேதமும், இந்த உலகில் உள்ள எல்லா மொழியினருக்கும், இனத்தவருக்கும், நாட்டவருக்கும் உரிய ஒன்று" என்ற பேருண்மையை நிலையாக நினைவில் நிறுத்திச் செயல்பட வேண்டும். அதாவது, நமக்கு எந்த ஒரு மொழியினரிடத்தோ அல்லது எந்தவோர் இனத்தவரிடத்தோ அல்லது எந்தவொரு நாட்டவரிடத்தோ பகை உணர்வோ, எதிர்ப்புணர்வோ உருவாகி விடாமல் நம்மவர்கள் செயல்பட வேண்டும்.

2. இந்து வேதமே, "இவ்வுலகில் தோன்றக் கூடிய எல்லா வேதங்களும் இந்து வேதம் எனும் ஆலமரத்தின் இலைகளாகவோ, கிளைகளாகவோ அல்லது விழுதுகளாகவோதான் இருக்க முடியும்" என்று அழுத்தம் திருத்தமாக, ஆணித்தரமாகக் கூறுகிறது. எனவே, நம்மவர்கள் எந்தவொரு மதத்திடமும் பகை உணர்வோ, எதிர்ப்புணர்வோ உருவாகி விடாமல் செயல்பட வேண்டும்.

3. நம்மவர்கள் இந்து வேதத்திற்கும், இந்து மதத்திற்கும் தமிழ் இனம், தமிழ் மொழி, தமிழ் நாடு என்ற முக்கோண நாற்றங்கால்தான் விதைப் பண்ணையாக இருக்க முடியும் என்ற இந்துவேத இந்துமதக் கருத்தை முழுமையாக நினைவில் கொண்டுதான், ஒவ்வொரு சொல்லையும், செயலையும் உருவாக்க வேண்டும். அதாவது, தமிழ் மொழி இன நாட்டு மலர்ச்சியும், வளவளர்ச்சியும், செழிச்சி உயர்ச்சியும், ஆட்சி மாட்சியும்தான் இந்துவேதத்திற்கும், இந்துமதத்திற்கும் மறுமலர்ச்சியைத் தரமுடியும், வளவளர்ச்சியைத் தரமுடியும், செழிச்சி உயர்ச்சியைத் தரமுடியும் என்ற பேருண்மையை உணர்ந்து நம்மவர்கள் செயல்பட வேண்டும், செயல்பட்டேயாக வேண்டும்.

4. "அண்டபேரண்ட அருளாட்சி நிகழ்த்தும் மூலப் பதினெண்சித்தர்களாலும், பதினெட்டாம்படிக் கருப்புகளாலும் இம்மண்ணுலகுக்கு, இம்மாஞாலத்திற்கு, இப் பூமிக்கு, இப் புவிப்பரப்புக்கு, இக் குவலயத்திற்கு என்றைக்கும் உரிய அருளாட்சி நாயகங்களாக, மூலவர்களாக, காவலர்களாக, தலைவர்களாக, வாரிசுகளாக, வித்துக்களாக, சொத்துக்களாக விளங்கிடுவதற்கென்றே அதாவது வாழ்ந்திடுவதற்கென்றே தேர்ந்தெடுக்கப்பட்டு உருவாக்கப்பட்ட இனத்தவர்களே தமிழினத்தவர்கள், தமிழர்கள்" என்ற பேருண்மை மனுநீதியின் பதினெட்டு நூல்களிலும், இந்துவேதத்தின் 396 நூல்களிலும் மிகத் தெளிவாக விளக்கப் பட்டிருக்கின்றது. எனவே தமிழர்களால்தான் உலக ஒற்றுமை, சமாதானம், சமத்துவம், அமைதி, கூட்டுறவு வாழ்வு முதலியவற்றை உருவாக்க முடியும், உருவாக்க முடியும், உருவாக்க முடியும் என்ற பேருண்மையை நம்மவர்கள் முழுமையாகப் புரிந்தும் புரியவைத்தும் செயல்பட்டிட வேண்டும். அப்பொழுதுதான், தமிழர்களுக்கிடையில் வளமான, வலிவான, பொலிவான ஒற்றுமையும், ஒருமைப்பாடும், சமத்துவமும், சகோதரத்துவமும், கூட்டுறவு வாழ்வும் உருவாக்கப் பட்டேயாக வேண்டும் என்ற நோக்கிலும் போக்கிலும் தமிழர்களாக உள்ள இந்துக்களையும், இந்துக்களாக உள்ள தமிழர்களையும் செயல்படச் செய்ய முடியும் என்ற பேருண்மையை உணர்ந்து நம்மவர்கள் எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும்.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: தட்டச்சுப் பொறி நகலாக இருந்தது.//**

# சைவ சமய வரலாறு

8-6-94,
பொன்னேரி.

பெறுநர்:-

திரு சு.வே. நெடுஞ்சேரலாதன்,
தலைவர், தமிழர் சமயப் பாதுகாப்பு கழகம்,
மீனாம்பிகை நகர், மதுரை - 11.

சைவ சித்தாந்தப் பற்றுமிக்க திருவருட்செல்வர் நெடுஞ்சேரலாதன் அவர்கள் சமூகத்திற்கு,

பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு இந்துமதத் தந்தை, தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் திருவாய் மலர்ந்தருளிய வாசகத் தொகுப்பின் சுருக்கம்:

1. தங்களுடைய அஞ்சல் வாசகத்தின் சிறப்புமிக்க சொற்கள் தங்கள் உடலின் இளமையை அல்லது உள்ளத்தின் இளமையை அல்லது சிந்தையின் மாறாத இளமையை விளக்குகின்றன. இப்படிப்பட்ட தங்களை உடனே நேரில் பார்க்க குருபீடம் விரும்புகிறது.

**குறிப்பு**:- தங்களுக்குப் பொருளாதார வசதி இல்லாமலிருப்பின் போக்குவரத்து வசதிகள் நேரில் தரப்படும். முன்பணம் தேவையென்றால் இந்த அஞ்சலை இந்துவேதம் பரப்பும் நாயகம் த. கேசவன், (266, கீழவெளி வீதி, மதுரை-1, உரக்கடை) அவர்களிடம் காட்டி 16/6/94 காலையில் திருச்சி இருப்புப்பாதை வண்டி சந்திப்பில் சென்னையிலிருந்து மலைக்கோட்டை விரைவு வண்டியில் வந்து இறங்கும் ஞானவேந்தர், குருமகாசன்னிதானம், அரசயோகிக் கருவூராரைச் சந்திக்க வாருங்கள். திருமடத்தைச் சார்ந்தவர்கள் 1. சித்தர் முத்தீசர் வெ. செகதீசன், (13 மேலப்பொன்னகரம் 3வது தெரு, மதுரை-10); 2. சித்தர் உருத்திரத் தேவர் ச. துரைராசன், (115, புட்டுத்தோப்பு ரோடு, மதுரை-10) ஆகிய

இருவரையும் சந்தித்தால் மற்ற விவரங்களையும் தெரிந்து கொள்ளலாம். அவர்களிடம் இந்த அஞ்சலைக் காண்பியுங்கள்.

2. அன்பு மகனே! உன் பேரார்வம் பாராட்டப்படுகிறது. உன் ஏட்டறிவின் நிலையென்ன? பட்டறிவின் நிலையென்ன? நீ சார்ந்துள்ள நிறுவன நிர்வாகங்களின் கட்டமைப்புக்களின் நிலையென்ன? என்பதை அறிந்தே உன்னை செயல்படுத்திட வேண்டும். ஏனெனில், தமிழரின் வாழ்வும், வளமும் மங்காதிருக்க, தேங்காதிருக்க, ஏங்காதிருக்க உன் போன்றோரின் செயல் ஊக்கங்கள், வலுவான, வளமான ஆக்கப்பூர்வமான ஊக்கமளிப்புக்களால் பேணப்பட்டேயாக வேண்டும்.

நீ தமிழ்த்தாயின் வீரத் திருமகன்களில் ஒருவன். அருளுலக இருளகற்றப் பிறந்திருக்கும் திருவருட் செல்வன் நீ. உன்னுடைய ஊக்கம் ஆக்கம் பெற உன்னுடைய நோக்குகளும், போக்குகளும் தக்க முறையில் பக்குவப் படுத்தப்பட்டேயாக வேண்டும்.

அதற்குரிய போதகர், சாதகர், ஆச்சாரியார் பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி ஆவார். எனவே, உன்னைப் போன்றவர் என்று நீ நம்புகிற தோழர்கள் உனக்கிருந்தால், அவர்களை நீ நம்பினால்; அவர்களையும் குருபீடம் காண அழைத்து வா!

3. திருவருட்செல்வரே! தாங்கள் அனுப்பிய அச்சிட்ட புத்தகம், அறிக்கை, அறிவிக்கை முதலியவைகளையெல்லாம் ஏற்கனவே குருபீடத்திற்குத் தெரியும். அவற்றை உருவாக்கியவர்கள் குருபீடத்திற்குச் சொந்தக்காரர்களே.

4. எனவே, நீ உன் அஞ்சலின் மூலமும், அச்சிட்டவை மூலமும் தெரிவிக்க விரும்புகின்ற கருத்துக்கள் அனைத்தும் குருபீடத்திற்கு தெரிந்தவைதான், புரிந்தவைதான், ஏற்புடையவைதான். கவலைப்படாதே! கலக்கமடையாதே! கவலைப்படாதே! குழப்பமடையாதே!

ஆனால், ஆனால், ஆனால், ஆதிசிவனார் அருளிய இந்துவேத நூல்கள் 396உம், இந்துமத நூல்களான 36உம், குருபாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம், அரசபாரம்பரியம் எனப்படும் முப்பெரும்

வரலாற்றுத் தொடர்களும் வழங்குகின்ற, விளக்குகின்ற நெறிதான் சீவநெறி, சீவநெறி, சீவநெறி.

6. “ஆதிசிவனுர் அருளிய ‘சீவநெறி’தான் காலப்போக்கில் ‘சிவநெறி’ என்ருகி பிறகு இந்த சிவநெறியானது ‘சைவநெறி’ என்ருயிற்று”. பிறகு, இந்த சைவநெறிதான் அருளுலக அநுபவம் பெற்ற செயல் சித்தாந்தங்களால் **சைவ சித்தாந்த சமயம்** என்ருக்கப்பட்டது.

இந்த சைவநெறிக்குரிய சித்தாந்த நூல்களில் முதலிரண்டு 11வது பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, தஞ்சைப் பெரிய கோயிலேக் கட்டிய குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூருராால் 10, 11ஆம் நூற்ருண்டுகளில் பிறப்பிக்கப்பட்டவையாகும். இவரையடுத்து இவரது பாரம்பரியத்தில் தோன்றிய மெய்கண்ட சிவாச்சாரியாரே சைவசமய சாத்திரச் சுருக்கத்தை, சாத்திர அடிப்படையை உருவாக்கினுர். அவரது வழியில் வந்த அருள்நந்தி சிவாச்சாரியாரும், மறைஞான சம்பந்தரும், உமாபதி சிவாச்சாரியாரும்தான் சைவசமய சாத்திரங்கள் 14இல் மீதியுள்ள 12 சைவசமயச் சாத்திரங்கள் உருவாவதற்கு காரணமானவர்கள்.

7. இதுதான் சைவ சமய வரலாறு! இதுதான் சைவ சமய வரலாறு!! இதுதான் சைவ சமய வரலாறு!!! அதாவது, முதல் யுகத்தின் ஆரம்பத்தில் ஆதிசிவனுர் தமது, (i) விண்ணுலக பதினெண்சித்தர்கள் குழு, (ii) விண்ணுலக பதினெட்டாம்படிக் கருப்புக்கள் குழு, (iii) விண்ணுலக நாற்பத்தெட்டு வகைக் கடவுள்கள் குழு, (iv) விண்ணுலக நாற்பத்தெட்டு வகை வழிபடுநிலேயினர் குழு, (v) விண்ணுலக நாற்பத்தெட்டு வகைச் சித்தர்கள் குழு எனும் ஐந்து குழுக்களோடு இம்மண்ணுலகம் வந்து அண்டபேரண்ட அருளாட்சி நிகழ்த்தி வருகின்ற மூலப் பதினெண்சித்தர்களின் தாய்மொழியும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியும், அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியுமான முத்தமிழ் மொழியில் அருளிய இந்துவேத, இந்துமத நூல்களின் சாரம்தான் சைவ சமய சித்தாந்தம். ஆனுல், ஆனுல், ஆனுல்,

பலரும் துணிச்சலாக, ‘இந்த சைவ சமய சாத்திரங்கள் பதினுன்கும், சமசுக்கிருத மொழியிலிருந்து வந்தவை’ என்று தொடர்ந்து கூறி வருகிருர்கள்.

இது மட்டுமல்ல, சைவ சமயத்தின் உயிர்நாடியான மூலச் சின்னமான ‘*லிங்கம்*’ என்ற சொல்லே சமசுக்கிருத சொல்; சைவசமயக் கடவுளான ‘*ருத்ரன், ஸிவன், பார்வதி, ஸ்கந்தன், விஷ்ணு, பிர்மா*’ முதலிய அனைத்துக் கடவுள்களுக்குரிய பேர்களும் சமசுக்கிருதத்திற்குரியவையே என்று கூறி வருகிருர்கள். இதை நிரூபிக்கும் வண்ணமே சைவ சமயத் திருமடங்களும், மடாதிபதிகளும், சிவாச்சாரியார்களும், குருக்களும் ஸர்வ அனுஷ்டானங்களையும் (*அன்ருடப் பூசை நெறி முறைகளையும்*) ..... சமசுக்கிருத மொழியிலேயே செய்து வருகிருர்கள். இந்த இருளை அகற்றும் ஆதவனை சந்திக்க நேரில் திருச்சிக்கு வருக!

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

உடனே பதில் எழுதுக!

**பதினெண்சித்தர் மடம்,**
**8 - 6 - 94.**

**நகல் எழுதியவர்:**

சித்தர் தேரையரின் 2வது மகள்,
சித்தர் நான்மறையுடையார்,
அருள்மிகு ஆத்தாள் தேவி தஞ்சைக் கருப்பழகி சன்னிதானம்,
அருள்மிகு ஆத்தாள்தேவி விழுப்புரம் மேல்மலையனூர் அங்காளபரமேசுவரி சன்னிதானம்,
சித்தர் மகள் செல்வி லோகனுதன் இளையராணி தேவி.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தர் நான்மறையுடையார் இளையராணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது//**

# அருட்போர் ஆயத்த நிலை குருவாணை

## அருளாணை பெற்ற குருவாணை

பதினெண்சித்தர் மடம், அறக்கட்டளை,
எண்: 3, N.G.O. நகர், பொன்னேரி - 601204.

அருளாட்சி நாயகத்தின் திருபவ ஆண்டு, வைகாசித் திங்கள் 30ஆம் நாள், திங்கட்கிழமை, இந்துமத ஆண்டு நாற்பத்து மூன்று இலட்சத்து எழுபத்து மூன்ருயிரத்து தொண்ணூற்றைந்து (43,73,095), கிறித்துவ ஆண்டு 13-6-94 அதிகாலை 4:30 மணியளவில் விடுக்கப்படும் செயல்நிலை துவக்க விளக்க குருவாணை.

பெறுநர்:-

1. அருள்மிகு சித்தர் உருத்திரத் தேவர் ச. துரைராசன்,
2. அருள்மிகு சித்தர் முத்தீசர் வெ. செகதீசன்,
3. அருள்மிகு சித்தர் பொன்னுக்கீசர் பெ.சுப்பையா,
4. அருள்மிகு சித்தர் சட்டநாதர் அ. சுப்பிரமணி,
5. அருள்மிகு சித்தர் வருணதேவர் மு. மனோகரன்,
6. அருள்மிகு சித்தர் பிறம்மயோகி கு. இராசு,
7. அருள்மிகு சித்தர் தாண்டவராயக் கோன் தமிழரசன், .... முதலியோர்.

(1) திருச்சி மாவட்ட விரகாலூர் திருநெற்குன்றம் சிவன் கோயில் அருகில் அண்டபேரண்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட ஆத்தாள் தேவி யாமவேத மாரியம்மனுக்கு '**சமயபுர அருட்கோட்டம்**' நிறுவும் பணி துவக்கப்பட்டுள்ளது என்பதையொட்டி விடுக்கப்படும் '**அருட்போர் அருளாணை**'.

(2) கலியுகத்தின் இரண்டு அருட்போர் காலங்களிலும் சமயபுரம் மாரியம்மன்கள் பதினெட்டு (18) பேர்களும், சமயநல்லூர் மாரியம்மன்கள் பதினெட்டு (18) பேர்களும் வாழும் அருட்கோட்டங்கள் கண்டு-பிடிக்கப்பட முடியவில்லை. எனவே, இன்றைக்கு எல்லோரும் அறிய நடைமுறையில் இருக்கின்ற ஒரே ஒரு சமயபுரம் மாரியம்மன் கோயில், ஒரே ஒரு சமயநல்லூர் மாரியம்மன் கோயில் ஆகிய இரண்டுக்கும் துணையாக **சமயபுரம் மாரியம்மன்கள் அருட்கோட்டங்களும்**, **சமயநல்லூர் மாரியம்மன்கள் அருட்கோட்டங்களும்** பல்வேறு வகையான மாரியம்மன்களுக்கு உருவாக்கப்படும் திட்டம் அருட்போர் திட்டமாக அறிவிக்கப்படுகிறது.

(3) திருச்சி மாவட்ட விரகாலூர் (தின்னகுளம்) திருநெற்குன்றம் சிவன்கோயில் அருகில் அமைக்கப்படும் 'யாமவேத மாரியம்மன் கோயில்', 'யாமவேத சமயபுர மாரியம்மன் கோயிலாக, அருட்கோட்டமாக' அறிவிக்கப்படுகிறது. இது முதல், '**திருச்சி விரகாலூர் திருநெற்குன்ற யாமவேத சமயபுர மாரியம்மன் கோயில்**' என்று வழக்காற்றிலும், உலகியலிலும் அழைக்கப்படும். ஆனால், இது ஏட்டளவிலும், அருளுலக அளவிலும் '**திருச்சி விரகாலூர் திருநெற்குன்ற யாமவேத சமயபுர மாரியம்மன் அருட்கோட்டம்**' என்று குறிக்கப்படும். இது அருளாட்சி நாயகத்தின் அருளாணை பெற்ற குருவாணை.

(4) இம்மண்ணுலகிற்கு இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் அருளிய ஆதிசிவனாரின் வாரிசாக, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் மடாதிபதியாக, பீடாதிபதியாக நாளோலக்கத்திலும், திருவோலக்கத்திலும் அமர்ந்து, தாத்தா தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், அந்தணர் அண்ணல் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் நேரடியாக அருளாட்சி நாயகப் பொறுப்பேற்று அருட்போரின் ஆயத்தப் பணிகளுக்கும், அருளாட்சி அமைப்புப் பணியின் துவக்கப்

பணிகளுக்கும் அறிவிப்பு வழங்கியுள்ளார். இதன்படி, முறையே அருட்போர் ஆயத்தப் பணிகளின் துவக்கம் அறிவிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. அருளாட்சி அமைப்புப் பணி துவக்கம் அறிவிக்கப்பட்டு ஓர் ஆண்டு ஆகின்றது. இவற்றின்படி, அருளாட்சி நாயகமான தஞ்சைத் தாத்தா அவர்கள், திடீரென்று கடந்த சனிக்கிழமை வைகாசித் திங்கள் 28ஆம் நாள் தமது மகள் வயிற்றுப் பேரனும், இன்றைய பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியுமாகிய குருமகாசன்னிதானம், ஞாலகுரு, சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் வருகிற (18, 19-6-94) ஆனித் திங்கள் 4, 5 சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நேரில் எழுந்தருளும் திருச்சி மாவட்ட, விரகாலூர் திருநெற்குன்ற அருட்போர் அருட்பணி பயண நாட்களை 'அருட்போரின் கொடிநாள்' என்று அறிவித்துள்ளார். இதேபோல், ஆனித் திங்கள் முதல் நாள் புதன்கிழமை குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் சென்னையிலிருந்து திருச்சி உறையூர் வட்டார அருட்பணிக்காக புறப்படுகின்ற அருட்பயணம், **'அருட்போரின் ஆயத்தப் பணி துவக்க நாளாக'** அறிவிக்கப்படுகின்றது.

(5) முன்பு, இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசின் முதல் அரசனுக தாத்தா பதிமூன்றாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞானச்சாரியார், அந்தணர் அண்ணல், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் தாமே வளர்த்துத் தயாரித்திட்ட **'வெற்றித் திருமகன்'** எனும் முதல் விசயாலயச் சோழனுக்கு, **'சோழ வேந்தன்'** என்று முடிசூட்டியது இந்த உறையூர் பஞ்சவனேசுவரர் ஆலயத்தில்தான். அருட்போருக்காக முதல் **'களப்பலி பூசை'** கொடுத்தது உறையூர் குடமுருட்டி ஆற்றங்கரையிலுள்ள **'வெட்டவெளி அருட்கோட்ட நாயகி'** ஆத்தாள் தேவி வெல்போர்க் கொற்றவை, வெற்றிவேல் தடக்கைக் காளியம்மன் (வெக்காளியம்மன்) திருச்சன்னிதியில்தான். அதேபோல், இந்தத் திருபவ ஆண்டு ஆனித் திங்கள் 3ஆம் நாள் வெள்ளிக் கிழமை (17-6-94) உறையூர்

**'<u>வெட்டவெளிக் கருவறை கொண்டருளு நாயகி</u>'** ஆத்தாள் தேவி வெல்போர்க் கொற்றவை, வெற்றிவேல் தடக்கைக் காளியம்மன் கோயில் வட்டாரத்தில் **'அருட்போரின் ஆயத்தப் பணியின் அறிவிப்பு முழக்கம்'** அருளாட்சி நாயகத்தின் அருளாணை பெற்ற குருவாணையாக இன்றைய பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார் அவர்களால் அறிவிக்கப் படுகிறது. எனவே, முடிந்தவர்கள் கலந்து கொள்ளவும்.

(6) இதுபோல், அருட்போர் கொடி நாட்களாக ஆனித் திங்கள் 4, 5 (18, 19-6-94) சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் அறிவிக்கப் பட்டிருப்பதால்; அருளாட்சி நாயகத்தின் பேரனும், ஆதிசிவஞரின் நேரடி வாரிசும், அருளாணை வழங்கு குருவாணை ஓலை நாயகமுமாகிய குருமகா சன்னிதானம், ஞாலகுரு, சித்தர் அரசயோகிக் கருவூரார் அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார் அவர்கள் இந்த இரு நாட்களிலும் நமது மெய்ஞ்ஞானக் கொடிகளை ஏற்றுவார்! நமது மெய்ஞ்ஞானக் கொடிகளை ஏற்றுவார்!! நமது மெய்ஞ்ஞானக் கொடிகளை ஏற்றுவார்!!!

(7) இதன்படி, திருச்சி மாவட்ட விரகாலூர் திருநெற்குன்ற கிராமத்து வட்டாரத்தார்கள் அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார் அருட்கைகளால் தங்கள் தங்களுக்கு உரிய இடங்களில் மெய்ஞ்ஞானக் கொடிகளை ஏற்றிக் கொள்ளலாம். இத் திருவோலையை தெரிந்தவர்கள், புரிந்தவர்கள் தங்கள் தங்களின் பூசைக்காக, குடும்பத்திற்காக, சொந்தத்திற்காக, சொந்த இடங்களுக்காக, தெருவுக்காக, ஊருக்காக, வட்டாரத்திற்காக, வட்டத்திற்காக, தாங்கள் விரும்புகின்ற இடங்களுக்காக ஆனித் திங்கள் 4ஆம் நாள் முதல் தொட்டு, ஒரு மண்டல காலத்திற்கு ஆடி மாதம் 20ஆம் நாள் முடிய (ஆகசுட்டு 5 முடிய) உள்ள நாற்பத்தெட்டு (48) நாட்களில் மெய்ஞ்ஞானக் கொடி ஒன்றையாவது பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியாரிடமிருந்து

வாழ்த்துப் பெற்ற மெய்ஞ்ஞானக்கொடி ஒன்றையாவது பெற்றுக் கொள்ளுமாறு அருளாட்சி நாயகம் அருளாணை அறிவிப்பு செய்கிறார்.

'இப்பொழுது பெறுகின்ற மெய்ஞ்ஞானக் கொடியின் பயன் எண்ணற்ற பிறப்புக்களுக்கு மட்டுமின்றி, பிறப்புக்களின் எல்லை வரையிலும், எல்லை கடந்தும் நிலையான பாதுகாப்பினை அருளுலக தேர்ச்சி முதிர்ச்சி நிலைகளுக்கு நல்கிடும்! நல்கிடும்!! நல்கிடும்!!!' என்பது அருளாட்சி நாயகத்தின் அருளாணை பெற்ற குருவாணையாகும்! அருளாட்சி நாயகத்தின் அருளாணை பெற்ற குருவாணையாகும்!! அருளாட்சி நாயகத்தின் அருளாணை பெற்ற குருவாணையாகும்!!!

**அருளாணை பெற்ற குருவாணை ஓலை நாயகம்:**

தலைவர், குருதேவர், ஞானத்தந்தை,

அருட்போர் அருளாட்சி அமைப்புப்பணி பொறுப்பு நாயகம்,

அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார், குருமகாசன்னிதானம்,

ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.

**அன்பு**

**சித்தர்,**

13-6-94.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

<u>நகல் தயாரிப்பு:-</u>

சித்தர் தேரையரின் மூத்த மகள்,

அருள்மிகு ஆத்தாள் தேவி தில்லைக் காளியம்மன் சன்னிதானம்,

சித்தர் நான்வேதமுடையார், சித்தரடியாள் செல்வி லோகநாதன் கவிதா.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: தட்டச்சு செய்த பிறதியாகக் கிடைத்தது.//**

**செய்தித் தாளின் விளம்பரக் கட்டுரை**

**பதினெண்சித்தர் மடம்**

**அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்**

# சங்கராச்சாரியார் நூற்றாண்டு விழாவைப் பாராட்டி வெளியிடும் "இந்து வேதம்" (முதல் பாகம்)

விலை ரூ.10.00 அஞ்சல் செலவு ரூ.5.00

(1) பன்னெடுங்காலமாக எல்லாப் பொதுமக்களும் படித்து, அறிந்து, புரிந்து, பயன்படுத்தி மகிழ்ந்திடுவதற்கு வசதியாக இந்து வேதம் மலிவு விலையில் பகுதி பகுதியாக சிறிய சிறிய நூல் வடிவில் அச்சிட்டுத் தரப்படவில்லை. அக்குறையை போக்கும் பணி சங்கராச்சாரியார் நூற்றாண்டு விழாவில் துவங்குகிறது. ஏனென்றால், சங்கராச்சாரியார் நூற்றாண்டு விழாவில்தான் இந்து வேதத்துக்கென ஒரு கல்லூரி துவக்கப்பட்டு; அதுவே இந்துவேத பல்கலைக் கழகமாகவும், இந்து வேத ஆராய்ச்சி மையமாகவும் விரைந்த விரிந்த வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது. இதை இந்துக்கள் அனைவரும் வரவேற்றுப் பாராட்டிப் புகழ்ந்து நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

(2) நம் நாட்டில் நமது முன்னோர்களும், மூதாதையர்களும்; நமது முனிவர்களையும், இருடிகளையும், மகான்களையும், ஞானிகளையும், தவசிகளையும், வேள்வி வல்லார்களையும், வேதமோதிடும் வேதியர்களையும், வேதம் வல்ல வேத விற்பன்னர்களையும் மிகவும் போற்றிப் பணிந்து பாராட்டிப் பாதுகாத்ததன் மூலம் பல நூறாயிரக்கணக்கான ஓலைச்சுவடிக் கட்டுக்களாக **இந்துவேதம்** வடஇமயத்தின் விளிம்பு முதல் தென்கோடி கன்னியாகுமரிக் கடற்கரை மணல் பரப்பு வரை உள்ள **இந்துவேத இந்தியாவுக்குள்** விரவிப் பரவிக் கிடக்கின்றது. எனவேதான்,

காலப்போக்கில் ஏற்பட்டிட்ட அரசியல் மாற்றங்களையும், அரசியல் ஆக்கிரமிப்புக்களையும், அன்னிய வேதங்களின் படையெடுப்புக்களையும், ஆக்கிரமிப்புக்களையும், அந்நிய மதத்தவர்களின் நேரடிப் போர்களையும், போராட்டங்களையும், முயற்சிகளையும், திட்டமிட்ட பயிற்சிகளையும் வென்று, நின்று நிலவுகிறது நமது இந்து வேதம்.


(3) இன்று இந்தியத் துணைக்கண்டம் என்ற ஒரு குறிப்பிட்ட சுருங்கிய எல்லைக்குள் மட்டும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற, வாழ வேண்டிய, வரையறுக்கப்பட்ட வரம்புகளுக்குட்பட்ட குறுகிய வாழ்வினை உடையதாக இந்து வேதமும், இந்து வேத மதமும், இந்துக்களும் இருக்கின்றனர், இருக்கின்றனர், இருக்கின்றனர். ஆனால், ஒரு காலத்தில் இந்தப் புவிப்பரப்பு முழுவதும் இந்து வேதமும், இந்து வேத மதமான இந்து மதமும்தான் ஆட்சி செய்து கொண்டிருந்தன. இந்த உலக மக்கள் முழுவதுமே இந்துக்களாகத்தான் இருந்தனர். இந்த உலகம் முழுவதுமே இந்து வேதத்தின் வடிவமான **திரிசூலமும்**, இந்துவேதக் கொள்கையின் விளக்க இலக்கமாகத் தோற்றுவிக்கப்பட்ட **இலிங்க வடிவமும்**தான் பூசைக்குரியவைகளாக இருந்திட்டன. இன்றைக்கு இவை பொருள் புரியாதவைகளாகி விட்டன.

(4) இவற்றையெல்லாம் மாற்ற ஏற்றதொரு முயற்சியாக இந்துவேதத்தை இம்மண்ணுலகுக்கு அருளிய பதினெண்சித்தர் மடமும், இந்துமதத்தை இம்மண்ணுலகில் தோற்றுவித்த பதினெண்சித்தர் பீடமும், குவலய குருபீடமுமான அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் குருபாரம்பரிய மரபுப்படி குருகுலம், திருகுலம், தருகுலம், கருகுலம் தோற்றுவித்து இந்துவேத ஏட்டறிவையும், இந்துவேத வாழ்வியல் நடைமுறை சட்டதிட்டக் கட்டுப்பாட்டு மரபுகளையும், பழக்க வழக்கங்களையும், நம்பிக்கைகளையும், பிற ஒழுகலாறுகளையும் முறையான பட்டறிவாகவும், பயிற்சியறிவாகவும் வழங்கி வளர்த்து வருகிறார். இப்பொழுது, இந்துவேதக் கல்வியில் பொதுமக்களுக்கும், அரசுக்கும் அக்கறையும், ஆர்வமும் ஏற்பட்டு இந்துவேத பாடசாலை, இந்துவேத

பள்ளிக்கூடம், இந்துவேதக் கல்லூரி, இந்துவேதப் பல்கலைக் கழகம், ... முதலியவை தோன்ற ஆரம்பித்திருக்கின்றன. எனவே, இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, இந்துமதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவர் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய தாத்தா பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார், அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார் அவர்களின் கனவு நனவாவதற்காக எல்லா இந்துக்களும் தங்களால் இயன்ற எல்லாவகையான ஆதரவுகளையும், ஏந்துகளையும், உதவிகளையும் இந்துவேதம் வளர்த்திட, இந்துவேதம் பரப்பிட, இந்துவேதம் காத்திட வழங்கிடுக, வழங்கிடுக, வழங்கிடுக.

<u>தொடர்பு:</u>
**அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார்,**
அம்பத்தூர், சென்னை - 53.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல் குருமார் திரு வெங்கடேசன் அவர்களின் கையெழுத்தில் இருந்திட்டது.//**





11வது பதினெண்சித்தர் பீடாதிபதி






12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிப் போய்க் கொண்டிருக்கும் கோப்புக்களிலிருந்து வழங்கப்படுகின்றன.

## தமிழ்மொழியில் உள்ள இந்து வேதம்தான்

- நமது விழியாக இருக்க வேண்டும்!
- நமது வழியாக இருக்க வேண்டும்!
- நமக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும்!
- நமது வழித்துணையாக இருக்க வேண்டும்!
- நமது வழிப்பயனாக இருக்க வேண்டும்!

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ10/-